பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

02 11 2024 **SATURDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1) கிரீஸ் பிரதமர் திரு. Kyriakos Mitsotakis-வுடன் இருதரப்பு ஒத்துழைப்பு, பாதுகாப்பு, வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் தாம் முக்கிய பேச்சுக்கள் நடத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2) மத்திய உள்துறை அமைச்சருக்கு எதிராக கனடாவின் துணை அமைச்சர் திரு டேவிட் மோரிசன் தெரிவித்த கருத்துக்கு இந்தியா தனது எதிர்ப்பை பதிவு செய்துள்ளது.

3) சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் கட்டப்பட்டுவரும் 18 புதிய பேருந்து நிலையங்கள் அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் பயன்பாட்டிற்கு வரும் என்று மாநில அமைச்சர் திரு சேகர்பாபு கூறியுள்ளார்.

4) தமிழகத்தில் அடுத்த 24 மணிநேரத்தில் அநேக இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5) இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் நியூசிலாந்து 9 விக்கெட் இழப்பிற்கு 171 ரன் எடுத்துள்ளது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

கிரீஸ் பிரதமர் திரு. Kyriakos Mitsotakis-வுடன் இருதரப்பு ஒத்துழைப்பு, பாதுகாப்பு, வர்த்தகம் உள்ளிட்ட துறைகளில் தாம் முக்கிய பேச்சுக்கள் நடத்தியுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பு குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி, தொலைபேசி வாயிலாக நடத்திய இந்த பேச்சு ஆக்கப்பூர்வமாக அமைந்தது என்று கூறியுள்ளார்.

இந்தியா, மத்தியக்கிழக்கு ஐரோப்பிய பொருளாதார மண்டலத்தில், பொருளாதார வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்டுவரும் மண்டல அளவிலான திட்டங்கள் குறித்தும், உலகளாவிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித்தும் தாம் விவாதித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இருதரப்பு ஒத்துழைப்புக்காக மேற்கொள்ளப்பட்ட உயர்மட்ட அளவிலான பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமான பலன்களை அளிக்கும் என்று இருதலைவர்களும் இந்த உரையாடலின்போது மகிழ்ச்சி தெரிவித்தனர்.

பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் கப்பல் மற்றும் போக்குவரத்து வசதி தொடர்பாகவும் இருதலைவர்களும் உரையாடினர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி மூன்றாவது முறையாக மீண்டும் பதவியேற்றிருப்பது குறித்து கிரீஸ் பிரதமர் வாழ்த்து தெரிவித்தார்.

<<<<<<>>>>>

மத்திய உள்துறை அமைச்சருக்கு எதிராக கனடாவின் துணை அமைச்சர் திரு டேவிட் மோரிசன் கருத்து தெரிவித்ததற்கு இந்தியா கடும் எதிர்ப்பை பதிவு செய்துள்ளது.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், கனடாவின் துணைத்தூதரை அழைத்து, இந்தியா தனது எதிர்ப்பை பதிவு செய்ததாக தெரிவித்தார்.

இதுதொடர்பான தூதரக ரீதியிலான குறிப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

கடந்த மாதம் 29-ஆம்தேதி ஒட்டாவாவில் நடைபெற்ற கனடா அரசின் நிலைக்குழு முன்பு அந்நாட்டு துணை அமைச்சர் திரு டேவிட் மோரிசன் தெரிவித்த கருத்து, சர்வதேச ஊடகங்களில் வெளியானது குறித்தும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதுபோன்ற கனடா அரசின் பொறுப்பற்ற நடவடிக்கைகள் இருதரப்பு உறவுகளை பெரிதும் பாதிக்கும் என்றும் அந்த குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக திரு ஜெய்ஷ்வால் கூறினார்.

கனடாவில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகள் கண்காணிக்கப்படுவதாக கூறிய அவர், இதுதொடர்பாகவும் கனடா அரசிடம் இந்தியா புகார் தெரிவித்துள்ளது என்றார்.

அங்குள்ள இந்திய தூதரகத்திலிருந்து வெளியாகும் காணொலி மற்றும் தொலைத்தொடர்புகள் ஒட்டுக்கேட்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

இதுதொடர்பாக, தூதரக ரீதியிலான நடவடிக்கையை இந்தியா மேற்கொள்ளும் என்றும் அவர் தெரிவித்தார்.

கனடாவில் உள்ள இந்திய அதிகாரிகள் தீவிரவாதமும், வன்முறையும் சூழ்ந்த ஒரு பகுதியில் இருப்பதாக அவர் கூறினார்.

இந்நிலையில், கனடா அரசின் நடவடிக்கைகள் இந்தியாவுக்கு எதிராக வன்முறை மற்றும் தீவிரவாத நடவடிக்கைகளை தூண்டும் வகையில் அமைந்துள்ளதாகவும் வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் தெரிவித்தார்.

கனடாவில் தீபாவளி கொண்டாட்டங்கள் தடை செய்யப்பட்டது துரதிருஷ்டவசமானது என்று கூறிய திரு ஜெய்ஷ்வால், இது அந்நாட்டிற்கு சகிப்புத்தன்மை இல்லாததை உணர்த்துவதாகவும் குறிப்பிட்டார்.

அந்நாட்டுடனான விசா நடைமுறைகள் குறித்து தெரிவித்த அவர், அங்குள்ள மாணவர்கள் மற்றும் பணிக்காக சென்றவர்களின் பாதுகாப்பு குறித்தும் இந்தியா கண்காணித்து வருவதாகவும் கூறினார்.

<<<<<<>>>>>

சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் கட்டப்பட்டுவரும் 18 புதிய பேருந்து நிலையங்கள் அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்று மாநில அமைச்சர் திரு சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

சென்னையை அடுத்த கொளத்தூரில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளை இன்று ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் திரு சேகர்பாபு, சென்னை புறநகர் பகுதிகளில் உள்ள அனைத்து பேருந்து நிலையங்களிலும் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

திருச்செந்தூர் கந்தசஷ்டி விழாவுக்கு 14 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், அவர்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் தயார் நிலையில் உள்ளதாகவும் அமைச்சர் திரு சேகர்பாபு கூறினார்.

*(வாய்ஸ் பைட் - சேகர்பாபு - 40 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>

தமிழகத்தில் அடுத்த 24 மணிநேரத்தில் அநேக இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

*(வாய்ஸ் பைட் - செந்தாமரைக்கண்ணன் - 38 நொடிகள்)*

<<<<<<>>>>>

சென்னையில் உள்ள தமிழ்நாடு திருநங்கைகள் நல வாரியத்தில் இரண்டு புதிய அலுவல் சாரா உறுப்பினர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

இதற்காக விண்ணப்பிக்க விரும்பும் தகுதியான திருநம்பி மற்றும் இடை பாலின நபர்கள் சென்னை மாவட்ட சமூக நல அலுவலகத்தினை தொடர்பு கொள்ளுமாறு சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த்த ஜெகடே கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

தமிழக வெற்றிக்கழக மாநாட்டின்போது பாதுகாப்புப்பணியில் ஈடுபடுவதற்காக சென்றபோது சாலை விபத்தில் உயிரிழந்த விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த காவலரின் குடும்பத்தினருக்கு மாநில அமைச்சர் திரு பொன்முடி 25 லட்சம் ரூபாய்க்கான காசோலையை இன்று நேரில் வழங்கினார்.

-------------

மயிலாடுதுறை மற்றும் சீர்காழியில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர் திரு மகாபாரதி இன்று ஆய்வு செய்தார்.

-------------

கிறிஸ்தவர்கள் மறைந்த தங்களது முன்னோர்களுக்கு அஞ்சலி செலுத்தும் கல்லறைத் திருநாள் இன்று அனுசரிக்கப்பட்டது.

------------

கோவை மாவட்டம் பொள்ளாச்சியில், தொடர் விடுமுறையையொட்டி, ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வால்பாறை மற்றும் கவியருவியில் குவிந்துள்ளனர்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

மும்பையில் நடைபெற்றுவரும் இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று ஆட்டநேர இறுதியில் நியூசிலாந்து தனது இரண்டாவது இன்னிங்சில் 9 விக்கெட் இழப்பிற்கு 171 ரன் எடுத்துள்ளது.

நியூசிலாந்து 143 ரன் முன்னிலை பெற்றுள்ளது.

இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா 4 விக்கெட்டுகளையும், அஸ்வின் மூன்று விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

வாஷிங்டன் சுந்தரும், ஆகாஷ்தீப்-மும் நியூசிலாந்தின் தலா ஒரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

முன்னதாக, இந்தியா தனது முதல் இன்னிங்சில் 263 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

----

இந்தியா "ஏ" அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாம் நாளான இன்று ஆஸ்திரேலியா "ஏ" அணி ஆட்டநேர இறுதியில் 3 விக்கெட் இழப்பிற்கு 139 ரன் எடுத்துள்ளது.

----------

19 வயதுக்குட்பட்டோருக்கான உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், 5 வெள்ளிப் பதக்கங்களை வென்றது.

------------

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் Anahat Singh இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<END>>>>>**